(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(3).]

# பாராளுமன்றத்தின்
# 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2025 மே 23, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2025 ஜூன் 03, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 82 ஆம் மற்றும் 92 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 156 ஆம் பிரிவின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 மார்ச் 20 ஆம் திகதிய 2428/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஜூன் 06, வெள்ளிக்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2025

கௌரவ லால் பிரேமநாத்,— உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவில் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்,— கடந்த காலங்களில் இலங்கை முழுவதுமுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் பொது நிதியானது பாரியளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய சகல அலுவலர்களுக்கும் நிலவும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஜூன் 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

279/2024

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குறுஞ்செய்திச் சேவை (SMS) மூலம் மின்சாரக் கட்டண பட்டியலை அனுப்பிவைக்க ஆரம்பித்து இற்றைவரை எவ்வளவு காலம் கடந்துள்ளது என்பதையும்;

(ii) தற்போது அனைத்து மின் பாவனையாளர்களும் குறுஞ்செய்திச் சேவையைப் (SMS) பெற பதிவு செய்துள்ளார்களா என்பதையும்;

(iii) இன்றேல், இதுவரை பதிவு செய்யாத மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி சேவையைப் பெற பதிவுசெய்ய முடியாத மற்றும் கையடக்க தொலைபேசிகள் இல்லாத மின் பாவனையாளர்களுக்கு மின்சாரக் கட்டண பட்டியல்களை கிடைக்கச் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

307/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்தப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான சம்பளங்கள் மற்றும் ஊதியங்களுக்கான மொத்த மாதாந்த மற்றும் வருடாந்தச் செலவினங்கள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அரசாங்க ஆசிரியரொருவரின் சராசரி மாதாந்தச் சம்பளம் எவ்வளவென்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான காலக்கெடு யாதென்பதையும்;

(iii) 100 மாணவர்களை விடக் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அத்தகைய பாடசாலைகளின் பெயர்களை, மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த ஐந்து வருடங்களில் அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எதிர்வரும் ஐந்து வருடங்களில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

452/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிங் கங்கை பெருக்கெடுப்பதன் காரணமாக காலி மாவட்ட மக்களின் வாழ்வியலுக்கும் உடமைகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டின் பின்னர் கிங் கங்கையின் பெருக்கெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது வேறு நோக்கத்தைச் செயல்படுத்துவதற்கான உத்தேச கருத்திட்டங்கள் தொடர்பாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகளைத் தயாரித்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்ட அறிக்கைகள் / சாத்தியவள ஆய்வறிக்கைகளைத் தயாரிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(vi) அதற்கான நிதியைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிங் கங்கையின் பெருக்கெடுப்பைக் கட்டுப்படுத்துவதற்காக கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் ஒவ்வொரு கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, முடிவுற்ற ஆண்டு, ஒதுக்கப்பட்ட தொகை, செலவிட்ட தொகை, செயற்படுத்திய நிறுவனம் மற்றும் பெறப்பட்ட தீர்வுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

456/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருவார்களென எதிர்பார்க்கப்பட்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்ற நாடுகள் யாவை என்பதையும்;

(iii) அந்த சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான தங்குமிட/அறை வசதிகள் போதுமான அளவில் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) கொவிட்-19 பெருந்தொற்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தன்னெழுச்சிப் போராட்டம் (அரகலய) போன்ற காரணங்களால் வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் சுற்றுலா ஹோட்டல் துறையின் வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிற்றுறையை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இலங்கையிலுள்ள சுற்றுலா வலயங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

569/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கு மீண்டும் வந்து பணிபுரிய வேண்டும் என்ற கடுமையான நிபந்தனையின் கீழ், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டம் அல்லது பிற உயர் கல்வியை நிறைவுசெய்வதற்காக சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன்கீழ், 2005 ஆம் ஆண்டின் பின்னர் முன்னாள் சனாதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நிதி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அத்தகையோரில் கலாநிதி பட்டம் பெற்று மீண்டும் நாடு திரும்பிய மற்றும் நாடு திரும்பாதோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(v) இலங்கைக்கு மீண்டும் திரும்பாத நபர்கள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) இவர்களுக்காக அரசாங்கத்தால் செலவிடப்பட்ட நிதி அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

586/2025

கௌரவ அஜித் கிஹான்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு நிதி திரட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட மஹபொல கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி இறுதியாக நடாத்தப்பட்ட திகதி, இடம் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தில் இன்றளவில் காணப்படும் மூலதனச் சொத்துக்களின் அளவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

802/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய அதிவேகப் பாதையை நிர்மாணிப்பதற்காக காணிகள் கையகப் படுத்தப்பட்ட போது பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளது என்பதையும்;

(ii) கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்காக செலுத்தப்பட வேண்டிய நட்டஈடு பெரும்பாலான காணி உரிமையாளர்களுக்கு இதுவரையில் செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள நட்டஈட்டுத் தொகைகளை செலுத்துவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நட்டஈட்டுத் தொகைகள் செலுத்தப்படுதல் நீண்டகாலமாக தாமதமாகியுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நட்டஈட்டுத் தொகைகளை செலுத்துவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

837/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பிராந்திய வேலைத்தளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை நிறுவப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) இலங்கை போக்குவரத்துச் சபையின் மதவாச்சி பிராந்திய வேலைத்தளத்தில் டயர்களை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(v) 2025 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியளவில் அதன் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

847/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, அந்த ஆணைக்குழுவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு விசேட சலுகைகளின் கீழ் காணிகளைக் கையுதிர்த்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு காணிகள் கையுதிர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அது தொடர்பிலான முழுமையான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு விசேட சலுகைகளின் கீழ் காணிகள் கையுதிர்க்கப்பட்டதன் சட்ட ரீதியான அடிப்படை யாதென்பதையும்;

(v) அவ்வாறு கையுதிர்க்கப்பட்ட காணிகளை வேறு தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கோ அல்லது கைமாற்றம் செய்வதற்கோ இயலுமையுள்ளதா என்பதையும்;

(vi) விசேட சலுகைகளின் கீழ் கிடைக்கப்பெற்ற காணிகளுள் வேறு தரப்பினருக்கு விற்பனை அல்லது கைமாற்றம் செய்யப்பட்டுள்ள காணிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(vii) மேற்படி காணிகளை வேறு தரப்பினருக்கு விற்பனை அல்லது கைமாற்றம் செய்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

875/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2014.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் உரிய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்பு உறுதி (Deed of Grant) அல்லது காணி அனுமதிப்பத்திரம் (Land permit) வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்பு உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2025 ஜூன் 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

515/2025

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் இறந்தவர்களை நினைவுகூறும் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் அரசாங்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதை அறிவாரா;

(ii) சமூக ஊடகங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் இனவாதம், மதவாதம் மற்றும் வெறுப்புணர்வு கூற்றுக்கள் வெளியிடப்படுவதற்கு எதிராக தற்போது நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள் யாவை;

(iii) இச்சட்டங்களில் கடந்த காலத்தில் அதிகமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்ட சட்டங்கள் யாவை;

(iv) ஊடகங்களில் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் பிரச்சாரம் செய்யப்பட்ட பின்னர் இவற்றின் உண்மை நிலை தொடர்பாக அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் விளக்கங்கள் விரைவாக பிரச்சாரம் செய்யப்படாமையினால் ஏற்படக்கூடிய இழுக்கினை தடுத்து நிறுத்துவதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(v) இந்நிலையை நிவர்த்தி செய்வதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படாமலிருப்பதற்கும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைககள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

613/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அருகிலுள்ள பாடசாலை – சிறந்த பாடசாலை கருத்திட்டத்தின்" கீழ் மத்திய மாகாணத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களில் தற்போது பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள மற்றும் நிறைவு செய்யப்படாத கருத்திட்டங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) பணிகள் நிறைவு செய்யப்படாத கருத்திட்டங்களை விரைவில் நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

633/2025

கௌரவ முஜிபுர் ரஹ்மான்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்தினால் 2020-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில், இன்றளவில் நிறைவடைந்துள்ள வழக்கு விசாரணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவ்வழக்குகள் யாவையென்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளில், சட்டத்துறை தலைமை அதிபதியினால் மீளப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) அவ்வழக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

636/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம், பாலாவியிலிருந்து அறுவக்காறு சுண்ணாம்புக்கல் ஆலைக்கு சுண்ணாம்புக் கற்களை ஏற்றிச் செல்வதற்கு இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத என்ஜின்கள், பெட்டிகள் மற்றும் துணை உறுப்புகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட உபகரணங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மேற்படி உபகரணங்களை குத்தகை அடிப்படையில் வழங்கியதன் மூலம் இலங்கை புகையிரதத் திணைக்களம் ஈட்டிய வருமானம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி குத்தகை ஒப்பந்தத்தை சமகால தேவைப்பாடுகளின் அடிப்படையில் மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

650/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசுக்கு சொந்தமான தேசிய மருந்துத் தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆய்வுக்கூடத்தை தாபித்ததன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) இன்றளவில் தேசிய மருந்துத் தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் உரிய முறையில் இயங்காததன் காரணமாக, இறக்குமதிச் செய்யப்படும் அதிகளவான மருந்துகள் உரிய தரக்கட்டுப்பாட்டு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி தேசிய மருந்துத் தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கூடத்தை உரிய முறையில் இற்றைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

715/2025

கௌரவ தனுஷ்க ரங்கநாத்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குக்குலே கங்கை மின் உற்பத்தி நிலைய நிர்மாணிப்பு கருத்திட்டத்திற்கான காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதி யாது என்பதையும்;

(ii) அந்த கருத்திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்ட காணியின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் நுழைவுப் பாதை குறித்து அறிவாரா என்பதையும்;

(ii) அந்த நுழைவுப் பாதையின் ஆரம்ப இடம் மற்றும் முடிவிடம் யாது என்பதையும்;

(iii) மேற்படி நுழைவுப் பாதையில் வீதி இலக்கம் 437 இற்கான பேருந்து சேவையில் உள்ளதுடன், அந்தப் பாதையானது பொதுப் போக்குவரத்துப் பாதையாக மாறியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) அந்தப் பாதையில் குக்குலே கங்கை மின் உற்பத்தி நிலையத்திற்குச் சொந்தமான பகுதியின் தூரம் யாது என்பதையும்;

(v) முறையாக பராமரிக்காததன் காரணமாக, அண்ணளவாக அந்த வீதிப் பகுதியின் சரிபாதியான பகுதி பாதுகாப்பற்றதாக மாறியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(vi) குறித்த வீதிப் பகுதியை முறையாக பராமரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vii) இன்றேல், அந்தப் பாதை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

724/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (i)

(அ) (i) 'சுவ செரிய' நோயாளர் காவு வண்டிச் சேவை மூலம் மிகச் சிறந்ததொரு சேவை இடம்பெறுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சேவையை மேலும் வலுவூட்டுவதற்கும், விஸ்தரிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

792/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கான வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உரிமம் பெற்ற பேருந்து உரிமையாளர்களுக்குச் சொந்தமான, சேவையில் ஈடுபடுத்துவதற்குப் பொருத்தமற்ற பேருந்துகளை விற்பனை செய்ததன் பின்னர், புதிய பேருந்துகளை கொள்வனவு செய்ய பேருந்து இறக்குமதி செய்யப்படும் வரை காத்திருக்க வேண்டிய நிலையேற்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில், அப்பேருந்து உரிமையாளர்கள் வீதி அனுமதிப் பத்திரத்தை ஆணைக்குழுவிடம் ஒப்படைத்திருந்தனர் என்பதையும்;

(iii) பேருந்து இறக்குமதி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் புதிய பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தியபோது, மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையானது 'ஒட்டப் பதிவுக் குறிப்பு' வழங்குகையில் சேவையில் ஈடுபடுத்தப்படாத காலப்பகுதிக்கும் நிலுவைத் தொகையை அறவிடுகிறது என்பதையும்;

(iv) பேருந்து இறக்குமதி நிறுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில் பேருந்துகளை கொள்வனவு செய்ய முடியாமல் போனதால் புதிய பேருந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாமல் போனது என்பதையும்;

(v) ஆகையால், பேருந்துகளுக்கான 'ஒட்டப் பதிவுக் குறிப்பினை' வழங்கும் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாத காலப்பகுதிக்கு ஏற்புடையதாக நிலுவைத் தொகையை அறவிடுவது அநீதியானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறெனில், இது தொடர்பில் வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

848/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மினுவங்கொடை நகர சபைக்குச் சொந்தமான 'நவீன வர்த்தக கட்டிடத் தொகுதி' என்ற பெயரில் அழைக்கப்படும் வர்த்தக கட்டிடத் தொகுதியொன்று மினுவங்கொடை நகரில் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அங்குள்ள விற்பனைக் கூடங்களின் (கடை அறைகள்) எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அந்த விற்பனைக் கூடங்கள் ஒவ்வொன்றையும் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பெயர், முகவரி மற்றும் அறவிடப்படும் மாதாந்த அல்லது வருடாந்த வாடகை வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத் தொகுதியில் உள்ள விற்பனைக் கூடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட நபர்களுக்கு, அந்த விற்பனைக் கூடங்களை வேறொருவருக்கு விற்பனை செய்வதற்கு, குத்தகைக்கு விடுவதற்கு அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு சட்டப்பூர்வ அனுமதி உள்ளதா என்பதையும்;

(ii) தற்போது இந்த விற்பனைக் கூடங்களில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள், மினுவாங்கொடை நகர சபையுடன் ஒப்பந்தங்களைச் செய்து, அந்த விற்பனைக் கூடங்களைப் பெற்றுக்கொண்ட அதே நபர்களா என்பதையும்;

(iii) இன்றேல், தற்போது அந்த விற்பனைக் கூடங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நபர்களின் பெயர்ப் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) அந்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

864/2025

கௌரவ லால் பிரேமநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பு எத்தனை சதவீதம் என்பதையும்;

(ii) தேயிலைக் கொழுந்தை முடிவுத் தேயிலையாக உற்பத்தி செய்வதில், தேயிலைத் தொழிற்சாலைகளில் முக்கிய பணி மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைய வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தினுள் பௌதீக ரீதியாக உண்மையாகவே அமைந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) அவ்வாறெனில், அது கள சோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி தேயிலைத் தொழிற்சாலைகள்/தொழிற்சாலை ஏதேனுமொரு காரணத்தின் அடிப்படையில், தற்போது முடிவுத் தேயிலை உற்பத்தியிலிருந்து விலகியுள்ளனவா / விலகியுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 ஜூன் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

13/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் விசேட பங்களிப்பினை வழங்கும் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் வசதிகளை விருத்திசெய்தல் மிகவும் முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) இலங்கையிலுள்ள தேசிய கல்வியிற் கல்லூரிகளின் எண்ணிக்கை எத்தனை;

(iii) மேற்படி கல்வியிற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்பட்ட கல்விசாரா பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iv) மேற்படி கல்விசாரா பணியாட்டொகுதியின் ஒவ்வொரு பதவிக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் இன்றளவில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(vi) அவ்வாறாயின், அந்த திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

76/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாநகர சபைக்குரிய பிரதேசங்களிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ள மற்றும் புதிதாக அமைக்கப்பட வேண்டிய வடிகாலமைப்புகள் காணப்படுகின்றன என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், ஏற்கனவே உள்ள வடிகாலமைப்புகளை புனரமைப்பதற்கும் புதிய வடிகாலமைப்புகளை அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

113/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் புகையிரதத் திணைக்களம் பயணிகள் போக்குவரத்தின் மூலமாகவும் பொருட்களைச் ஏற்றிச்செல்வதன் மூலமாகவும் 2015ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை ஈட்டியுள்ள வருமானம் ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) புகையிரதம் மூலமாக பொருட்கள் ஏற்றிச்செல்லப்படுவதை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

215/2024

கௌரவ ரோஹன பண்டார,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஈ.எஸ் வீசா முறைமையின் கீழ் தென்கொரிய பருவகால தொழில் நிமித்தம் சென்றுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) தற்போது இச்செயற்பாட்டில் ஏதேனுமொரு வெளித்தரப்பொன்று தலையீடு செய்திருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அதன் காரணமாக தென்கொரிய தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இலங்கையர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி இருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

720/2025

கௌரவ டபிள்யூ.எச்.எம். தர்மசேன,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்தக் கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மொனராகலை மாவட்டத்தில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமுதாய அடிப்படையிலான நீர்வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவற்றில், தற்போது வெற்றிகரமாக நடைமுறையில் உள்ள சமுதாய அடிப்படையிலான நீர்வழங்கல் திட்டங்கள் யாவை என்பதையும்;

(v) மொனராகலை மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்காக சமுதாய அடிப்படையிலான நீர்வழங்கல் திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மொனராகலையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகமொன்று அமைக்கப்பட்டிருந்தபோதும், தற்போது அந்த அலுவலகம் அகற்றப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக மொனராகலைப் பிரதேச மக்களுக்கு சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து சேவைகளைப் பெறுவதற்கு பதுளை அல்லது கதிர்காமத்திற்குச் செல்ல வேண்டியிருப்பதால், இவர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மொனராகலையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகத்தை மீண்டும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

855/2025

கௌரவ (திருமதி) ஏ. எம். எம். எம். ரத்வத்தே,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி சீ வலயத்தில் 1000 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணியொன்று முதலீட்டு கருத்திட்டமொன்றுக்காக இன்பொமெட்டிக் தனியார் நிறுவனத்திற்கு கையுதிர்க்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி காணியின் முதலாவது குத்தகை காலம் நிறைவடைந்து இரண்டாவது குத்தகை காலத்திற்கான குத்தகை அனுமதியை வழங்கியபோது, மதிப்பீட்டு தொகை அதிகமென்பதால் குத்தகை தொகையில் சலுகை வழங்கப் பட்டுள்ளதுடன் இதனால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பெருமளவு குத்தகை தொகை இழக்கப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு குத்தகை தொகையில் சலுகையை வழங்க முடியுமா என்பதையும்;

(ii) மேற்படி குத்தகை தொகையில் சலுகையை வழங்குவதற்கான அடிப்படை யாதென்பதையும்;

(iii) இதனை திருத்தியமைப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

916/2025

கௌரவ சந்தன தென்னகோன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகலை, கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவின், இலக்கம் 472, பொத்துவில கிராம அலுவலர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 76 ஏக்கர் காணி, கமத்தொழில் அமைச்சின் முன்னோடிக் கருத்திட்டமொன்றுக்காக 1999ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) அதற்காக ஆணைக்குழுவுக்கு செலுத்தப்பட்ட இழப்பீடு, வட்டி மற்றும் மொத்த தொகை தனித்தனியே எவ்வளவு;

(iii) மேற்படி காணியை கையகப்படுத்துவதற்கான கோரிக்கை யாரால் முன்வைக்கப்பட்டது;

(iv) மேற்படி காணி கையகப்படுத்தப்பட்டதன் பின்னர் இருப்பாட்சி யாரிடம் ஒப்படைக்கப்பட்டது;

(v) மேற்படி விவசாய உற்பத்திகளுக்கான முன்னோடிக் கருத்திட்டம் யாது;

(vi) மேற்படி கருத்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை முதலீட்டுச் சபை பாரியளவில் மூலதன செலவினத்தை செய்துள்ளதை அறிவாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கையகப்படுத்தப்பட்ட காணி, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் ‘ஹிரியால கமநலக் கம்பனி’ க்கு 30 வருடங்களுக்கு பகுதியளவிலான குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) மேற்படி கம்பனி செலுத்த வேண்டிய வருடாந்த குத்தகைத் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி கம்பனியின் தலைவர் யார்;

(iv) இதன்போது அரச நிதி/சொத்துக்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்வாரா;

(v) இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

918/2025

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்தியப் பிரதமரின் இலங்கைக்கான விஜயத்தின் போது இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களினதும் விவரங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்தினையும் அடையாளம் கண்டு அங்கீகரிப்பதில் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்களை அடையாளப்படுத்தும் செயன்முறையின் போது அவற்றுடன் தொடர்புடைய பங்கீடுபாட்டாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், கலந்தாலோசிக்கப்பட்ட நபர்களின்/அமைப்புக்களின் பெயர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய விவரங்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

922/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையிலுள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இறுதியாக சிவப்பு தரவுப் புத்தகம் வெளியிடப்பட்டுள்ள ஆண்டு யாது;

(iii) அதற்கமைய, இலங்கையிலுள்ள காட்டு யானைகள் தொடர்பிலான அச்சுறுத்தல் மட்டம் யாது;

(iv) 2024ஆம் ஆண்டில் யானை– மனிதன் மோதல் காரணமாக உயிரிழந்துள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கையும், ஆட்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாது;

(v) யானை– மனிதன் மோதல் காரணமாக உயிரிழந்துள்ள ஆட்கள் மற்றும் இடம்பெற்றுள்ள சொத்து இழப்புக்களுக்காக 2024 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

925/2025

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்குச் சொந்தமான வெளிசரை களஞ்சியசாலை கட்டிடத்தொகுதி அமைந்துள்ள காணியின் ஒரு பகுதி, வத்தளை நீதிமன்ற சட்டத்தரணிகளுக்கான அலுவலக கட்டிடத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி காணி ஒதுக்கப்பட்டுள்ள வழிமுறை யாது என்பதையும்;

(iii) வத்தளை சட்டத்தரணிகள் சங்கம் மேற்படி காணித் துண்டை, தற்போது வேறொரு நபருக்கு வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக வாடகைக்கு வழங்கியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி காணித் துண்டு குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 ஜூன் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

159/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கை, ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மாணவர்களுள் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் புலமைப்பரிசில் பரீட்சையை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு ஏற்புடைய வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர் காலத்தில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், இடைநிறுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) அப்பரீட்சை இடைநிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

192/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை சுகாதார அமைச்சுக்கும், அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் கிடைக்கப்பெற்ற நிதியுதவிகள் மற்றும் நிதியல்லாத உதவிகளின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையின் படி, அவை சரியான முறையில் கணக்கு வைக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

224/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “வளமான நாடு-அழகான வாழ்க்கை” கொள்கைப் பிரகடனம் மூலம் ஸ்மார்ட் நீதிமன்ற வளாகங்களை தாபிப்பதற்கு வாக்குறுத்தியளிக்கப்பட்டுள்ளதா;

(ii) அதற்கமைய, தற்போது ஸ்மார்ட் நீதிமன்ற வளாகங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள் யாவை;

(iii) இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பை ஸ்மார்ட் நீதிமன்றக் கட்டமைப்பாக மாற்றியமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) அதற்காக 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

280/2024

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வீடற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குவதற்கான ஒரு வேலைத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்த உத்தேசித்துள்ள காலப்பகுதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

310/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபை நிறுவப்பட்ட திகதியினையும்;

(ii) கடந்த 3 வருடங்களில் அச்சபையினால் ஒவ்வொரு மாவட்டத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு மற்றும் பெறுமதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) நெல் கொள்வனவுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நெல் களஞ்சியப்படுத்தல் சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(v) ஒவ்வொரு மாவட்டத்திலும் அறுவடை செய்யப்பட்ட மொத்த நெல்லிலிருந்து அரசாங்கத்தினால் வருடாந்தம் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் சதவீதம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறிய மற்றும் பாரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களுக்கு அரச வங்கிகளால் கடந்த 3 வருடங்களில் வழங்கப்பட்ட நிதியின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட ஆலை உரிமையாளர்களால் அக்காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) அவ் ஆலை உரிமையாளர்களின் பெயர்களையும் மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் அவர்கள் கொள்வனவு செய்த நெல்லின் அளவு மற்றும் பெறுமதி யாதென்பதையும்;

(iv) நெல்லை அரிசியாக மாற்றி அதனை மாவட்ட மட்டத்தில் விநியோகிப்பதற்கான முறைமையொன்று நிறுவப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

442/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரச பாடசாலைகளில் பதில் கடமையாற்றும் அதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பதில் கடமையாற்றும் அதிபர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பதில் கடமையாற்றும் அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்க கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளை தற்போதைய அரசாங்கம் நடைமுறைப்படுத்துகிறதா என்பதையும்;

(iv) பதில் கடமையாற்றும் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

457/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள இடமாறல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையில் கெலணிகம இடமாறலில் இருந்து தொடங்கொட இடமாறல் வரையாகவுள்ள தூரம் எவ்வளவென்பதையும்;

(iii) பெல்பொல இடமாறலை அமைப்பதற்காக தற்போது காணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி காணிகளுக்குச் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) பெல்பொல இடமாறலை வேறோர் இடத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) அந்த விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

587/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எக்ஸ்பிரஸ் பேர்ல் (X-Press Pearl) கப்பல் விபத்து காரணமாக இலங்கையின் மேற்கு கடற் பிராந்தியம் உட்பட ஒட்டு மொத்த சமுத்திரச் சூழலுக்கும், கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கும் பாரியளவிலான சேதம் ஏற்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி விபத்துடன் தொடர்புடைய சம்பவத்தின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

(iii) அவ்விபத்து காரணமாக கடற்றொழிலுக்கும், சூழலுக்கும் ஏற்பட்ட சேதம் மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வொவ்வொரு சேதமும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி சேதங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், வழங்கப்பட்ட இழப்பீடு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

620/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை தொடர்புபடுத்திக் கொண்டு திருகோணமலை பிரதேசத்தில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை தாபிப்பதற்குள்ள வாய்ப்புக்கள் பற்றி ஆராயுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு, அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ள திகதி யாது;

(ii) திருகோணமலை பிரதேசத்தில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பது தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

924/2025

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டணம் செலுத்துவதன் அடிப்படையில் தனிப்பட்ட மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளின் பாதுகாப்புக்கு நாட்டின் பொலிஸ் அலுவலர்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான சட்ட ஏற்பாடு யாது என்பதையும்;

(iii) அது தொடர்பான நடவடிக்கைமுறை யாது என்பதையும்;

(iv) பொலிஸ் அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை வழங்குகையில் உயர்ந்தபட்ச வரையறை விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேலே (i) இல் குறிப்பிட்டுள்ள சேவைகளை வழங்கும்போது கட்டணம் அறவிடும் வழிமுறை யாது என்பதையும்;

(vi) 2024 ஆம் ஆண்டு மற்றும் 2025 ஆம் ஆண்டில் இதுவரை அத்தகைய சேவைகளை வழங்கியதன் மூலமாக இலங்கை பொலிஸ் திணைக்களம் ஈட்டிய வருமானம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கோரிக்கை விடுக்கும் தரப்பினர் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தரப்பினருக்கு யாதேனும் அச்சுறுத்தல் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் பாதுகாப்பு பகுப்பாய்வு அறிக்கை கோரப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?